2011 ஆகஸ்ட் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ் அவர்கள்.*

டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகராட்சிப் பகுதியில் 1–வது வார்டில் 1,638 கார்டுகள் ஒரு கடையில் இருக்கின்றன. அதை வளையநந்தர் கிராமத்தில் 225 கார்டுகள் தனியாக பகுதி நேரக் கடையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் இந்தப் பகுதியில் அதிகமாக கார்டுகள் இருப்பதால் அதைப் பிரிக்க வேண்டுமென்று கேட்டபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஜே.ஆர். அவர்கள் கூறுகின்றபோது அதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்று கூறினார்கள். வைகை நகர் போன்ற பகுதிகளில் 242 கார்டுகள் இருக்கின்றன. அவற்றிற்காக முழுநேரக் கடையிலிருந்து பகுதி நேரக் கடை பிரித்துத் தரப்படுமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. புத்திசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கூறிய பதில்தான். மேற்கண்ட நிபந்தனைகள் பூர்த்தியாகாமல் உள்ள இனங்களில் மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதுபோல தளர்வு செய்ய வேண்டிய இனமாக இருப்பின் மாவட்ட ஆட்சியரால் பரிந்துரை செய்யப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதி பெற்று, பகுதி நேரக் கடைகள் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

74—

சுகாதார நிலையம்

***1130**—**திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[*2011 ஆகஸ்ட் 30*

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பஞ்சப்பட்டியில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பஞ்சப்பட்டியில் இருக்கின்ற சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதி கொண்டதாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது என்பதை தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டிருந்தாலும்கூட, சென்ற மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே ஒரேயொரு மருத்துவரை மட்டும் அனுமதித்து, சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற ஏராளமான கிராமங்களிலிருந்து ஒரு நாளைக்கு 300 புறநோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். அதோடு, 20 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரத்தில் வேறு மருத்துவமனை இல்லாததால், இந்த மருத்துவமனையை அரசு மருத்துவமனை, தாலுகா மருத்துவமனைக்கு ஒப்பாக உயர்த்தி, அதிலே* emergency centre, *இரத்த வங்கி,* scan, *மற்றும்* specialised doctor-*களையெல்லாம் பயன்படுத்தி, நல்ல தரம் உயர்ந்த மருத்துவமனையாக ஆக்கவேண்டுமென்று கேட்டு, என்னையெல்லாம் உருவாக்கிய தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையாக அமைக்க வேண்டுமென்றால், அது மாவட்டத் தலைநகரமாக இருக்கவேண்டும். இல்லையென்றால், தாலுகா தலைநகரமாக இருக்கவேண்டும். பஞ்சப்பட்டி கிராமம் கிருஷ்ணராயபுரம் தாலுகாவிலே வருகிறது. அந்தத் தாலுகாவிலே இதற்கு முன்பாகவே ஒரு தாலுகா*

2011 ஆகஸ்ட் 30]

மருத்துவமனை இருக்கின்றது. ஒரு தாலுகாவிலே, ஒரு தாலுகா மருத்துவமனைதான் கொண்டு வரமுடியும். அதுமட்டுமல்லாமல், பஞ்சப்பட்டியிலேயிருக்கின்ற 30 படுக்கை வசதிகொண்ட மருத்துவமனையிலே அறுவை அரங்கம் இருக்கின்றது, ஸ்கேன் வசதி இருக்கின்றது, அதோடுமட்டுமல்லாமல், 5 மருத்துவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே, அந்த மருத்துவமனை நன்றாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, இராயபுரம் தொகுதி, திருவொற்றியூர் தொகுதி, இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி மற்றும் மாதவரம் தொகுதி ஆகிய 5 தொகுதிகள் சங்கமிக்கக்கூடிய இடத்தில், 4 இலட்சம் மக்கள் வாழக்கூடிய இடத்தில், ஒரு புறநகர் மருத்துவமனையை கொடுங்கையூர் அல்லது கண்ணதாசன் நகரில் அமைக்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதுபோல், கொளத்தூர் தொகுதிக்கு உட்பட்ட பெரியார் நகரில் இருக்கின்ற புறநகர் மருத்துவமனை ஏற்கெனவே DME control-ல் இருந்தது. அந்த மருத்துவமனையில் blood bank, ventilator போன்ற அடிப்படை வசதிகள் கிடையாது. ஆகவே, DME control-ல் General Hospital control-ல் இருந்தபோது, இங்கேயிருந்து உடனடியாக அங்கே அனுப்பி அல்லது அங்கிருந்து இங்கே வண்டியில் கொண்டுவந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இப்போது அதை DMS control-க்கு அனுப்பியிருப்பதால் மக்கள் பாதிக்கப்படுவார்கள். முன்பு போலவே, பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையை DME கட்டுப்பாட்டிலேயே வைக்கவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வியாகக் கேட்டால், விளக்கமாகவும், விரிவாகவும் பதில் அளிக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.